**Chief Patron:**
Hon. Speaker,
Parliament of Sri Lanka.

**Patron:**
P. Dayaratne,
Former Minister.

குடிமக்களின் வீரச்செயல்களுக்கான மன்றம்
Foundation for Civilian Bravery

137 ஏ, பெக்கேகம வீதி, வலன, பாணந்துறை.
137A, Bekkegama Road, Walana, Panadura, Sri Lanka.

Tel / Fax 038 2241777
Email info@civilianbravery.org
Web www.civilianbravery.org

ஊடக விடுப்பு

07 ஓகஸ்ட் 2019

தொடர்பு: 038 2241777
(வேலை நாட்களில்: மு.ப. 9.00 - பி.ப. 4.30)
(சனிக் கிழமை: மு.ப. 9.00 - மு.ப. 11.30)

# 26வது தேசிய வீரமானிடர் விருதுகள் 2020

## விருதுக்கான விண்ணப்பங்கள் கோரல்

வீரமானிடர் மன்றம், 2020ல் வழங்கப்படவுள்ள தேசிய வீரமானிடர் விருதுக்குப் பொருத்தமான இலங்கைக் குடிமக்களை முன்மொழியும் விண்ணப்பங்களை தற்போது ஏற்றுக் கொள்கிறது. 2009ம் ஆண்டு 4ம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மன்றமானது, வருடந்தோறும் பின்வரும் விருதுகளை வழங்கிவரும் அதேவேளை 2020 விழாவானது தேசிய விழாவாக ஜுன் மாதம் கொழும்பில் இடம்பெறவுள்ளது. வீரச் செயல்கள் 2019ல் இடம் பெற்றிருக்க வேண்டும். விண்ணப்பங்களைப் பெற்றதும், கிடைக்கும் சான்றுகள் மற்றும் நேர்முகத் தேர்வுகளின் அடிப்படையில் கௌரவ நடுவர்கள் குழுவினரால் விருதுகளைப் பெறத் தகுதியானவர்கள் பின்வரும் விருதுகளுக்கு, குறிப்பிட்ட விதிமுறைகளுக்கும் தகைமைகளுக்கும் அமைய தெரிவு செய்யப்படுவர்.

**தேசிய வீரமானிடர் விருதுகள்:** விருதுக்கு முன்மொழியப்படுபவர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். அவர் தனது உயிருக்கு அல்லது உடலுக்கு ஏற்படக்கூடிய ஆபத்தைச் சிறிதும் பொருட்படுத்தாது, நீரோட்டம், தீ, சுரங்க விபத்து, கொந்தளிக்கும் கடல் அல்லது அதையொத்த இயற்கைப் பேரழிவு அல்லது மனிதன் ஏற்படுத்திய பேரழிவுச் சூழலில் சிக்கி உயிருக்குப் போராடும் மனிதரின் அல்லது மனிதர்களின் உயிரைத் தானாக முன்வந்து காப்பாற்றும் அல்லது காப்பாற்ற முயற்சிக்கும் துணிச்சலை வெளிப்படுத்தியவராக இருக்க வேண்டும். வீரமானிடருக்கான விருதுகளில் 'புதல் பிரபு' தங்கப் பதக்கம், வெள்ளிப் பதக்கங்கள் அடங்கியுள்ளன.

**வீரமானிடர் சமூக நல்லிணக்க விருது:** இன ஒற்றுமைக்குப் பங்கம் ஏற்படும்போது தமதோ அல்லது பிற இன உறுப்பினரையோ காப்பாற்று முகமாக தமதுயிரைப் பணயம் வைத்து இன நல்லிணக்கத்திற்கும் சமாதானத்திற்கும் பாடுபடும் வீரமானிடருக்கு வழங்கப்படும் விருது ஆகும்.

**வீரமானிட உயிரினநேயர் விருது:** உயிரின வளங்கள், உயிரினத் தொகுதிகள் அடங்கலாக இயற்கைச் சூழலைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் ஒருவர் தன்னார்வத்துடன் செய்யும் வியக்கத்தகு செயல்கள், இந்த விருதைப் பெறுவதற்கான தகைமை ஆகும்.

**மாணவ வீரமானிட சமூக செயற்பாடு விருது – தங்க, வெள்ளிப் பதக்கங்கள்:** சமூக சேவைக்கென பாடசாலை முறைமையில் ஏற்கப்பட்ட அமைப்புக்களின் நோக்கங்களை அடைவதற்காக துணிச்சலுடனும் அர்ப்பணிப்புடனும் தனது கடமைகளை செய்த மாணவனுக்கு வழங்கப்படும் விருது.

**பொது நிபந்தனைகள்:**

1. விண்ணப்ப முடிவுத் திகதி: 31 -08- 2020
2. செயல் நடந்த காலம்: 01 ஜனவரி 2019 முதல் 31 -05- 2020
3. ஒருவரது வீரச்செயலை நன்கறிந்தவர் அல்லது வீரச்செயல் புரிந்தவர் மேற்படி விருதுக்கான விண்ணப்பங்களை அனுப்பலாம். விண்ணப்பப் படிவங்களை வீரமானிடர் மன்றத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
4. ஒரு நபரின் தொழில்சார் கடமைகளுக்கு அப்பாற்பட்ட வீரச்செயல்களே விருதுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.
5. போதியளவு சான்றுகளை ∴ ஆதாரங்களைச் சமர்ப்பிப்பது விண்ணப்பித்தவரின் ∴ வீரச்செயல் செய்தவரின் பொறுப்பாகும்.
6. 'புதல் பிரபு' தங்க பதக்கத்தை வென்றவர்கள் மீண்டுமொருமுறை விருதுக்கு தெரிவு செய்யப்படமாட்டார்கள்.
7. மாணவர்கள் தமது விண்ணப்பங்களை பாடசாலை அதிபரின் ஊடாக அவரின் பரிந்துரையுடன் அனுப்பவேண்டும்.
8. நடுவர்கள் குழுவின் முடிவே இறுதியானது.